உ
சிவ சிவ

அன்புநெறி

மலர்-14 ஏப்பிரல் 2010 இதழ்-9

$1.50

விளங்குதிருச்செங்குன்றூர் வோளாண் தொன்மை
விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்
வளங்குலவு தொண்டாடி வணங்காதேகும்
வன்தொண்டன் புறகவனை வலிய ஆண்ட
துளங்கு சடை முடியோனும் புறகென்றன்பால்
சொல்லுதலும் அவர்தொண்டத்தொகைமுன் பாட
உளங்குளிர உளதென்றார் அதனால் அண்ணல்
உவகைதர உயர்கணத்துள் ஓங்கி னாரே.

– உமாபதி சிவாச்சாரியார்

சிற்றம் பலமன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக்கூறு நாள் எந்நாளோ.

– தாயுமான சுவாமிகள்

DR. ILLANGO & ASSOCIATES

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)

உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.

Dr. M. Illango

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

Dr. Janaki Illango

B. D. S. Family Dentistry

SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
(416) 292 -7004

MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
Mississauga, ON
(905) 270-7844

அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி $1.50, சிறப்புப் பிரதி $3.00
வருடச் சந்தா (12 இதழ்கள்) $20.00
அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-

கனடா: Can. $ 35.00
அமெரிக்கா: Can. $ 40.00
ஏனைய நாடுகள்: Can. $ 50.00

தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா
Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada
(Tel.: 905-566-4822)

உ
சிவ சிவ

அன்புநெறி

மலர் -14 | விரோதி பங்குனி மார்ச் – விகிர்தி சித்திரை 2010 திருவள்ளுவர் ஆண்டு 2041 | இதழ் - 9

பொருளடக்கம் **பக்கம்**

1. விறன்மிண்ட நாயனார் . . . 4
2. வெண்டாமரையும் தண்டாமரையும் . 6
3. சிவஞானசுவாமிகள் . . . 13
4. ஆசான் அருளால்..... . . . 17
5. சிவஞானபாடியத்தில் சத்தும் அசத்தும். 20
6. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . 23
7. நம்பியாரூரர் 24
8. நீத்தார் நயப்புரை . . . 26

சிறுவர் பகுதி

9. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை–2 27
10. சைவபோதம் – 2 . . . 29

ஆசிரியர் : திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
நிர்வாக ஆசிரியர்: திரு. தி. விசுவலிங்கம்
உதவி ஆசிரியர்: திருமதி அநிதா திருமுருகா
வெளியீடு: சைவசித்தாந்த மன்றம், கனடா

திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

குருபூசை நாள்: சித்திரை – சுவாதி

கொந்தலர்பூம்பொழிற்கச்சி நகரே காலிக் குலத்தலைவர்
தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகில் வருந்தும்உடல்
எனவாங்கி மாசு நீத்த
கந்தைபுல ராதொழிய மழையும் மாலைக் கடும்
பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேல்
சிந்தமுடி புடைப்பளவில் திருவேகம்பர் திருக்கைகொடு
பிடித்துயர் வான் சேர்த்தினாரே.

– உமாபதி சிவாசாரியார்

அன்புநெறி
1008-50 Elm Dr. E. , Mississauga, ON. L5A 3X2 ,Canada
Fax/Tel (905) 566-4822 Email: saivamanram@gmail.com

விறன்மிண்ட நாயனார்

சிவனடியார் பக்தியை விளக்குவது விறன்மிண்ட நாயனார் வரலாறு. சிவபக்தியினும் அடியவர் பக்தியே திருவருளைப் பெறுவதற்கு எளியவழி.

மலைநாடான சேரநாட்டில் பல வளங்களும் செறிந்த திருச் செங்குன்றூர் என்ற ஒரு தலம் உண்டு. அங்கே விறன்மிண்டர் வேளாளர் குலத்தில் அவதரித்தவர். அவர் சிவபெருமானது திருவடிகளைப் பற்றி ஏனைய பற்றுகளை அறவே களைந்தவர்; முடிவில்லாத அன்புடையவர்; உண்மையான அடியார்களிடம் திண்மையான அன்பு பூண்டவர். அவர் தணியாத காதலுடன் ஐந்தெழுத்தை ஓதுவார்; திருநீறுங் கண்டிகையும் பூண்டு சிவபக்தி செய்து வருவார்.

சிவத்தலங்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் சென்று விறன்மிண்டர் சிவபெருமானை வழிபடுவார். அவ்வாறு வழிபடும்போது திருத்தொண்டர் திருக்கூட்டத்தை முதலில் தொழுதபின்னரே சிவபெருமானை வழிபடுவது அவரது வழக்கமாகும். விறன்மிண்டர் ஒருசமயம் தலயாத்திரை புறப்பட்டு மலைநாட்டைக் கடந்து, பல சிவத்தலங்களையும் வழிபட்ட பிறகு திருவாரூரை அடைந்து சிலகாலம் அங்கு தங்கி இருந்து நாள்தோறும் தியாகராசப் பெருமானை வணங்கி வந்தார்.

திருவாரூர் திருக்கோயிலில் சிறப்புற்று விளங்குவது தேவாசிரியன் மண்டபம். அத்திருமண்டபத்தில் எப்போதும் அடியார் கூட்டமாயிருந்து சிவநாமம் ஓதி அன்பு செய்வர். அம் மண்டபத்தில் நிறைந்துள்ள திருத்தொண்டர் கூட்டத்தை வணங்கி அக்கூட்டத்தின் நடுவுள் தாமும் ஒருவராக விறன்மிண்டர் இருந்தார்.

ஒருநாள் நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனார் அத் திருக்கோயிலில் தியாகேசப்பெருமானை வணங்க வந்தார். அவர் தேவாசிரியன் மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை முதலில் வணங்காமல் திருக்கோயிலினுட் புகுந்து செல்வாரானார். செல்பவர் தேவாசிரிய மண்டபத்தில் குழுமியிருக்கும் திருக்கூட்டத்தினரை நோக்கி "இத்திருத் தொண்டர்களுக்கு என்னை அடியேனாகச் செய்யும் நாள் எந்நாளோ?" என்று, இறைவனைச் சிந்தித்து நேரே கோயிலுட் சென்றார். அதனை விறன்மிண்டர் கண்டார். உடனே விறன்மிண்டர் "அடியார்களை வணங்காது செல்லும் வன்றொண்டன்

இவ்வடியார்களின் திருக்கூட்டத்துக்குப் புறம்பு! அவனை வலிய வந்தாட்கொண்ட சிவபெருமானும் புறம்பு'' என்றார்.

அதனைக் கேட்ட சுந்தரர் திகைத்து சிவனடியார்களிடம் விறன்மிண்ட நாயனார் கொண்டிருக்கும் அன்புறுதியைக் கண்டு வியந்து, சிவபெருமானைச் சிந்தித்தார். சிவபெருமான், ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்து அருளினார். உடனே சுந்தரமூர்த்தி நாயனார் அதை முதலில் வைத்து, ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடி சிவனடியார் திருக்கூட்டத்தைப் பணிந்து வணங்கினார். அதனால் விறன்மிண்டர் மகிழ்ந்து, ''இனி ஆரூரனும் ஆண்டவனும் அடியார் கூட்டத்துள் உள்ளவராவர்''என்று கூறினார்.

இவ்வாறு சிவனடியார்களின் பெருமையை நிலைநாட்டிய விறன்மிண்ட நாயனார், இவ்வுலகில் சைவநெறி போற்றி பெருந்தொண்டுகள் பல புரிந்து வந்தார். விறன்மிண்டரது அளவற்ற அடியார் பக்தியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் நாயனாரைத் தம்மைப் பிரியாது வணங்கும் சிவகணங்கட்குத் தலைவராக இருக்கும் பதவியை வழங்கி அருள்புரிந்தார்.

உலகம் உய்ய, நாம் உய்ய, சைவநெறியின் சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகையை சுந்தரமூர்த்தி நாயனார் மூலம் பாடுவித்த பெருமை விறன்மிண்ட நாயனாருக்கே உரியது.

பல தலங்களுக்குச்சென்று திருப்பதிகம் பாடிச் சிறந்து நின்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருத்தொண்டரைப் பாட வேண்டும் என்ற எண்ணம் உறுதிப் படுவதற்கு மூலகாரணமாய் இருந்தவர் விறன்மிண்ட நாயனார். திருத்தொண்டத் தொகை இல்லாவிடில் திருத் தொண்டர்களின் பெருமையைக் கூறும் பெரியபுராணம் தோன்றி இராது. பெரிய புரணத்துக்கு முளை திருத்தொண்டத்தொகையானால் அது முளைக்க உதவிய மழை விறன்மிண்டர் செயல் என்று கூறலாம். சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் இதைக் குறிப்பிடுகிறார்.

> ''வேறு பிறிதென் திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்
> பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறல்மிண்ட ரின் பெருமை
> கூறும் அளவென் அளவிற்றே?''

என்று விறன்மிண்டர் பெருமையை அவர் கூறுகிறார்.

''விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்''

– சுந்தரர்

ஆசிரியர் தி.வி.

வெண்டாமரையும் தண்டாமரையும்

தமிழ்ப் பேரறிஞர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

காசி மடத்தின் மூல ஆசிரியராகிய குமரகுருபரர் காசியில் எழுந்தருளியிருந்தார். அங்கே ஒரு மடத்தை நிறுவ வேண்டும் என்று அவர் எண்ணினார். அப்போது நவாபு ஒருவர் காசியை ஆண்டு கொண்டிருந்தார். மடம் கட்ட வேண்டுமானால் காசியில் இடம் வேண்டும். கங்கைக் கரையில் நல்ல இடத்தில் ஒரு மடம் கட்ட வேண்டுமானால் அதற்கு நவாப்பின் அனுமதி வேண்டும். எனவே, நேரில் போய் நவாப்பைப் பார்க்கலாம் என்று குமரகுருபரர் எண்ணினார். சும்மா போய்ப் பார்த்தால் தமக்கு வேண்டியதை அவர் கொடுப்பாரா என்ற ஐயம் எழுந்தது. அதன்மேல் இறைவன் திருவருளை எண்ணி, ஒரு சிங்கத்தைக் கொண்டு வந்து அதன்மேல் ஏறிக் கொண்டு நவாப்புக்கு முன்னால் போனார். சாதுவாக அந்தச் சிங்கம் குமரகுருபரரை ஏற்றிச் சென்றதைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கினார்கள். நவாபும் ஆச்சரியமடைந்து "தாங்கள் யார்? என்னிடம் எதற்காக வந்திருக்கிறீர்கள்" என்று பணிவுடன் கேட்டார். அப்போது குமரகுருபரர் "இங்கே எனக்கு ஒரு மடம் கட்ட வேண்டும் என்று ஆசை. கங்கைக் கரையில் ஒரு நல்ல இடம் வேண்டும். நீங்கள் அப்படி ஒரு நல்ல இடத்தைத் தந்தால் நன்றாக இருக்கும்" என்றார்.

நவாபோ இந்துஸ்தானி பேசுகிறவர். முனிவர் தமிழ் பேசுகிறவர். நவாபோடு தமிழில் பேச முடியாது. அவர் பேசுகின்ற மொழி குமர குருபரருக்குத் தெரியாது. வேறு யாரையாவது தமக்கு மொழி பெயர்ப்பாளராக வைத்துக் கொண்டால் தம் கருத்தைச் சரியாகச் சொல்வாரா என்ற ஐயம். அவர் இந்தியைக் கற்க வேண்டும் என்று நினைத்தார். தண்ணீர்த் தாகம் அதிகமாக இருக்கும்போது, கிணறு வெட்டி அதிலிருந்து நீரை எடுத்துச் சாப்பிடுவது முடியாத காரியம். அப்படி இனிமேல் இந்தியைக் கற்றுக் கொண்டு, அதில் பேசுவதற்குப் பழகி, அப்புறம் நவாபுடன் பேசுவது என்பது நடக்கிற காரியமா?

அப்போது முனிவர் எல்லாக் கலைகளுக்கும் நாயகியாகிய கலைமகளை எண்ணினார். ''சகலாகலாவல்லி மாலை'' என்னும் நூலைப் பாடினார். பத்துப் பாடல்களை உடைய அந்த நூல் கலைமகளின் அருளை வேண்டும் துதியாக அமைந்திருந்தது. அவளது அருளால் இந்தியில் அவரால் நன்றாகப் பேச முடிந்தது. நவாபுக்குச் சமமாக இந்தியில் பேச வல்லுனர் ஆனார். இந்தி மொழியிலேயே நவாபுடன் பேசினார். சிங்கத்தின் மேல் அமர்ந்து வந்த ஆற்றலையும், இந்தியில் பேசிய சாமர்த்தியத்தையும் கண்டு நவாபு, ''உங்கள் விருப்பம் போல் மடம் கட்டிக்கொள்ள இடம் தருகிறேன். எந்த இடத்தில் இடம் வேண்டும்?'' என்று கேட்டார். ''எந்த இடத்தில் உபய கருடர்கள் வட்டம் இடுகின்றனவோ அந்த இடத்தைத் தர வேண்டும்'' என்று சொன்னார். அங்கே கேதார கட்டத்தில் ஓரிடத்தில் உபய கருடன்கள் வட்டமிட்டன. அந்த இடத்தை நவாபு குமரகுருபரருக்குத் தந்தார். அந்த இடத்தில் முனிவர் மடம் கட்டிக் கொண்டு வாழ்ந்தார். அங்கே புராணசாலை என்ற ஒன்றை அமைத்துக் கொண்டு புராணங்களைப் பற்றிய சொற்பொழிவு ஆற்றினார். அந்த மடம் இன்றைக்கும் கேதார கட்டத்தில் குமாரசுவாமி மடம் என்ற பெயரோடு விளங்குகின்றது.

நவாபுடன் பேசுவதற்கு வல்லமை பெறவேண்டும் என்று எண்ணிய முனிவர் பாடியது **சகலகலாவல்லி மாலை.** கலைமகள் சிறப்பையும், தத்துவத்தையும் பற்றி அந்த நூல் மிக நன்றாக விளக்குகிறது. இனி அந்த நூலின் பொருட் சிறப்பைப் பார்க்கலாம்.

கலைமகள் வெண்டாமரையில் வீற்றிருக்கிறாள். நம்முடைய சமயத்தில் கடவுளைப் பற்றிய வருணனைகளுக்கெல்லாம் உள்ளுறை உண்டு. கடவுள் வடிவம், அவர் ஏறும் வாகனம், அவர் இருக்கும் கோயில் ஆகிய எல்லாம் சிற்சில குறிப்புக்களைக் கொண்டுள்ளன. இந்தக் குறியீடுகளை ''ஸிம்பாலிசம் (symbolism)'' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அறிவு அதிகமாக அதிகமாகக் குறியீடுகளே அந்த அறிவைக் காட்டும் வெளியீடுகளாக இருக்கும். இன்றைய கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் மேலே போகப்போகக் குறியீடுகள் மிகுதியாக இருப்பதைக் காணலாம்.

முதல் வகுப்பில் படிக்கும் மாணாக்கன் ஒன்று முதல் ஐம்பது வரை எண்ணுகிறான். மூன்றாவது வகுப்பில் படிக்கிற மாணாக்கன் கூட்டல், கழித்தல் ஆகியவற்றைப் போடுகிறான். முதல்

வகுப்பில் படிக்கிற மாணவன் ஒருநாள் மூன்றாவது வகுப்புக்குப் போகிறான். கரும்பலகையில் ஆசிரியர் 4-2=2 என்று எழுதியிருக்கிறார். நாலிலிருந்து இரண்டைக் கழித்தால் இரண்டு என்று மூன்றாவது வகுப்பு மாணவன் அதைப் படிக்கிறான். முதல் வகுப்புப் பையனைப் பார்த்துக் கேட்டால், நாலு, ஒரு கோடு, இரண்டு, இரண்டு கோடு, இரண்டு என்று படிப்பான். இங்கே ஒரு கோடு, இரண்டு கோடு என்பன முறையே ஒன்றிலிருந்து ஒன்றைக் கழிப்பதற்கு மிச்சம் இன்னது என்பதற்கும் உரிய குறியீடுகளாக வந்துள்ளன. அவை வெறும் கோடுகள் அல்ல. சாமானியக் கணக்கிலேயே மேலே போகப்போக இப்படிக் குறியீடுகள் இருப்பதைக் காணலாம். நம்முடைய சமயத்திலும் இப்படிப் பல குறியீடுகள் இருக்கின்றன. கோயில்களும், விக்கிரகங்களும் இத்தகைய குறியீடுகளே.

> ''குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
> நெறிக ளும்அவர் நின்றதோர் நீர்மையும்
> அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
> பொறியி லீர்உமக் கென்கொல் புகாததே''

என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார்.

கலைமகள் வெண்டாமரையில் வீற்றிருக்கிறாள் என்று புராணம் சொல்கிறது. வெள்ளைத் தாமரை நல்ல உள்ளத்தைக் குறிக்கும். பொதுவாக நம்முடைய உள்ளத்தை இதய கமலம் என்று சொல்வார்கள். உடம்பிலுள்ள தசைப் பிண்டமாகிய இதயம், தலைகீழாகத் தொங்கும் தாமரை மொட்டுப்போல இருப்பது. ஆனால் உணர்ச்சி நிறைந்த உள்ளமாகிய இதயமோ தாமரை மலரைப் போல இருப்பது. அதை இதய கமலம் என்று சொல்கிறார்கள்.

> ''மலர்மிசை ஏகினான்''

என்ற குறளுக்குப் பொருள் சொல்ல வந்த பரிமேலழகர், அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், ஏகினார் என இறந்த காலத்தால் கூறினார் என்று எழுதினார். ஆகையால் தாமரை என்பது உள்ளத்தைக் குறிப்பது.

தாமரையில் வெண்டாமரை, செந்தாமரை என்று இரண்டு வகை உண்டு. கலைமகள் எழுந்தருளியிருப்பது வெண்டாமரை, வெள்ளை, தூய்மைக்கு அடையாளம். தாமரையில் நல்ல தண்மை

இருக்கிறது; தூய்மை இருக்கிறது. நம்முடைய உள்ளம் எந்த விதமான மாசுமறுவும் அற்றுத் தூய்மையாக இருந்தால் அதன்மேல் கலைமகள் எழுந்தருள்வாள்.

தாமரை தண்மை உடையது. தண்மைக்குத் தான் ஈரம் என்று பெயர். ஈரம் என்பது அன்பைக் குறிக்கும்.

"ஈர அன்பினர் யாதும் குறைவிலர்"

என்பது பெரிய புராணம். தண்மையை உடைய தாமரையில் மணம் இருக்கிறது. அந்த மணம்தான் ஞானம். உண்மையை உணர்வதற்குரிய அறிவு அது. தாமரையில் விரிவு இருக்கிறது. அது சுருக்கம் இல்லாத உள்ளத்தைக் குறிப்பது. அதாவது, குறிப்பிட்ட ஒன்றை மாத்திரம் பார்த்து, அதனிடத்தில் மட்டும் பற்று வைக்கும் தன்மையின்றி விரிந்து நிற்பது. நுட்பமாகப் பார்ப்பது, கூரிய தன்மை; விரிவாகப் பார்ப்பது அகலமாகிய தன்மை.

"அ∴கி அகன்ற அறிவென்னாம்."

என்பது குறள். அறிவுக்குக் கூர்மையும் வேண்டும்; அகலமும் இருந்தால் ஆழமாகப் பல நூல்களை ஆராயும் அறிவு கிடைக்கும்.

உள்ளம் பரந்து இருக்க வேண்டும். பரந்த மனோபாவம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். தாமரை மலர் விரிந்து இருப்பது, தண்மையாக இருப்பது, வெண்மையாக இருப்பது, மணம் பொருந்தியிருப்பது, அதுபோல நம் உள்ளம் விரிந்த கொள்கையுடன் இருக்க வேண்டும். அன்பாகிய ஈரமும், அறிவாகிய மணமும் உடையதாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் கலைமகள் அங்கே இருப்பாள். சகல கலைகளின் அறிவும், ஞானமும் அந்த உள்ளத்தில் இருக்கும்.

கலைமகள் திருவருளைப் பெற்ற பலருள்ளும் கவிஞர்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்கள் உள்ளம் கற்பனையால் விரிந்து கிடப்பது. விருப்பு, வெறுப்பு இல்லாமல் இருப்பதால் வெண்மையை உடையது. சுவரில் சித்திரம் தீட்ட வேண்டு மென்றால் வெள்ளை அடிப்பார்கள். அப்போது தான் தீட்டுகின்ற சித்திரம் அழகாக அமையும். நல்ல காவியத்தை உள்ளத்தில் தீட்ட வேண்டுமானால் அந்த உள்ளம் விருப்பு வெறுப்பு இல்லாமல் தூயதாகவும், தண்மையாகவும் இருக்க வேண்டும். கற்பனை செய்கின்ற உள்ளம் அத்தகையது. அதில் பரிவு இருக்க வேண்டும். அதுதான் ஈரம்.

பெரிய கவிஞர்களுடைய உள்ளம் விரிவும், பரிவும் உடையது; விருப்பு வெறுப்பு அற்றது; அறிவு சிறந்தது. இவைகள் எல்லாம் இருந்தால் அங்கே கற்பனைகளும், கருத்தும் நிரம்பிக் கிடக்கும். அதாவது கலைமகள் திருவருள் சித்திக்கும்.

இவற்றையெல்லாம் எண்ணியே கலைமகள் வெண்டாமரை யில் வீற்றிருக்கிறாள் என்று குறிப்பாக அமைத்தார்கள்.

வெள்ளை என்பதற்கு மாசுமறுவற்ற நிலை என்பது ஒரு பொருள். ஒன்றுமில்லாத சூனியம் என்பதும் ஒரு பொருள். வெள்ளை அறிவு என்று சொன்னால் அறிவு இன்மையைக் குறிக்கும்.

குமரகுருபரர் கலைமகளைப் பாடத் தொடங்குகிறார். ''எம்பெருமாட்டியே, நீ வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கிறாய். அதோடு என் உள்ளத் தாமரையிலும் வீற்றிருக்கக் கூடாதா?'' என்று கேட்கிறார்.

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க என்
வெள்ளைஉள்ளத் தண்டா மரைக்குத் தகாதுகொலோ?

என்று பாடுகிறார். ''உன்னுடைய திருவடியைத் தாங்குவதற்கு வெள்ளைத் தாமரைக்குப் பாக்கியம் கிடைத்தது போல, என்னுடைய உள்ளமாகிய வெள்ளைத் தாமரைக்கும் கிடைக்கக் கூடாதா?'' என்கிறார்.

இங்கே வெள்ளை உள்ளம் என்பதற்கு, அறிவு ஒன்றும் இல்லாத சூனிய உள்ளம் என்று பொருள் கொள்ள வேண்டும். தண்மை என்பதற்கு இழிவு என்று பொருள். தண்டாமரை – இழிந்த தாமரை. ''ஒன்றும் அறியாத சூனியம் ஆகிய இழிந்த தாமரையைப் போன்ற உள்ளத்தில் உன் பாதம் தங்காதா? என் உள்ளத்தில் உன் திருவடி படாதா? என் உள்ளத்தில் வந்து இருக்கக் கூடாதா?'' என்று வேண்டுகிறார்.

பிறகு கலைமகளின் பெருமையைச் சொல்கிறார். அதை அழகாக எடுத்துக் கூறுகிறார்.

உலகத்தில் ஆக்கும் செயலைப் பிரமன் செய்கிறான். காக்கும் செயலைத் திருமால் ஏற்றிருக்கிறான். சங்காரம் செய்யும் தொழிலை ருத்திரன் ஏற்றுக் கொண்டிருக்கிறான்

இந்த மூவர்களில் பிரமன் தேவியாக இருப்பவள் சகலகலாவல்லி. பிரமன் நாவில் அவள் குடிகொண்டிருக்கிறாள்.

பிரமன் கலை வல்லாளன் என்பதையே அது காட்டும். பிரமன் சிருஷ்டி கர்த்தா. உலகை அவன் புதிது புதிதாகப் படைத்துக் கொண்டே இருக்கிறான். படைபாற்றலுக்குக் கலைமகளின் திருவருள் வேண்டும்.

பிரமன் நாவில் இருக்கின்ற கலைமகளின் தன்மையைச் சொல்ல வருகிறார். நயமான ஒரு கற்பனையை ஆளுகிறார். ஏழு உலகங்களையும் காப்பாற்றுகிற திருமால் அதனை உண்கிறானாம். எல்லாவற்றையும் தன் வயிற்றுள் அடக்குவதை, உண்டான் என்று சொன்னார். அதிகமாகச் சாப்பிட்டவனுக்கு உறக்கம் வந்துவிடும். அதுபோல் உலகம் ஏழையும் உண்ட திருமால் நாகபாம்பில் படுத்து உறங்குகிறான்.

எல்லா உலகத்தையும் சங்காரம் செய்கிறவன் ருத்திரன். அப்படிச் சங்காரம் செய்த பிறகு அவன் பித்தனைப் போலத் திரிகிறான். சங்கார மூர்த்தியாகிய சிவபெருமான் பித்தனைப் போலக் கையில் கபாலம் எடுத்துக் கொண்டு பிச்சையேந்தித் திரிகிறான். ஏழு உலகத்தையும் காப்பவன் சுகமாக உண்டு உறங்குகிறான். உலகத்தை அழித்தவன் பித்துப் பிடித்து அலைகிறான். இனிமேல் உலகத்தைப் படைக்க வேண்டும். இந்த இரண்டு பேர்களுக்கும் அதைப்பற்றிக் கவலை இல்லை.

பாதுகாப்பவன் குறட்டைவிட்டுத் தூங்குகிறான். மற்றவன் அழித்துவிட்டு ஊரைச் சுற்றித் திரிகிறான். மறுபடியும் பிரபஞ்சத்தை உண்டாக்க வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இல்லை. பிரமனுக்கு அந்தத் தலைச்சுமை இருக்கிறது. அவன் எல்லாவற்றையும் படைக்க வேண்டும். அப்படிப் படைக்கும் போது சலிப்பு ஏற்படும் அல்லவா? ஏதாவது புத்தகம் எழுதுகிறவர்கள் நடுநடுவே சிற்றுண்டியை உண்டு எழுதுவார்கள். சலிப்பைப் போக்கிக்கொள்ள நடுநடுவே காப்பி சாப்பிட்டுக்கொண்டு எழுதுவதும் உண்டு. இங்கே பிரமன் மறுபடியும் எல்லாவற்றையும் படைக்கத் தொடங்குகிறான். அடிக்கடி கரும்பைக் கடித்துக்கொண்டு ஊக்கத்தை மேற்கொள்கிறான். அப்படிக் கடித்துச் சுவை பார்ப்பதற்குரிய கரும்பாகச் சகலகலாவல்லி இருக்கிறாளாம். இப்படி ஒரு கற்பனை பண்ணி, அதனைச் சொல்கிறார் குமரகுருபரர்.

உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்

கண்டான சுவைகொள் கரும்பே
சகலகலாவல்லியே.

சுவைகொள் கரும்பு–கடித்துப் பார்க்கும் கரும்பு என்பது இன்பத்தை நுகரும் மனைவி என்று பொருள்படும். மனைவியோடு சேர்ந்திருப்பவனுக்குச் செய்கின்ற தொழில் நன்றாக முடியும். அவள் அவனோடு, அவன் செய்யும் தொழிலுக்குத் துணையாக இருப்பவள். அதனால் மனைவியை வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் சொல்கிறார். இங்கே, படைக்கும் கர்த்தாவாகிய பிரமனுக்குப் படைப்புக் குரிய அறிவைத் தந்து, துணையாக இருக்கிறாளாம் சகலகலாவல்லி. பிரமன் அடிக்கடி கடித்துக்கொள்ளும் கரும்பாக இருக்கிற நாயகி என்று நயமாகச் சொன்னார்.

இந்தப் பாட்டின் முற்பகுதியில் கலைமகள் தன்மையையும், பிற்பகுதியில் படைப்பவனுக்கு மனைவியாக இருக்கும் தன்மையையும் சொல்கிறார். விருப்பு வெறுப்பற்ற உள்ளத்தில், ஞானமும் அன்பும் நிரம்பிய உள்ளத்தில, கலைமகள் வீற்றிருப்பாள் என்பதையும், படைக்கின்றவனுக்கு அறிவு அவசியம் என்ற கருத்தையும் இந்தப் பாடல் விளக்குகிறது.

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க
என்வெள்ளைஉள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே!

(வெள்ளை உள்ளம் – அறிவற்ற உள்ளம், அளித்து – பாதுகாத்து, சகல கலாவல்லி – எல்லாக் கலைகளாகிய மலர்களைக் கொண்ட கொடி போன்றவள்.)

குமரகுருபரர் சிறந்த சைவர்; சிவபெருமானையும், அம்பிகையையும், முருகனையும் பாடியவர். அவர் சகலகலாவல்லி மாலையைப் பாடுகிறார். இதனால் அவரது சமரசஞானம் வெளிப்படும்.

..... தொடரும்

சிவஞானசுவாமிகள்

(சித்தாந்த கலாநிதி திரு. ந. ரா. முருகவேள் M.A, M.O.L.)

முன்னுரை

திருவாவடுதுறை ஆதீனத்தின் பெரும் புகழுக்குக் காரணராக விளங்கியிருந்த சிவஞானசுவாமிகள், இன்றைக்குச் சரியாக இருநூற்று இருபத்தைந்து (225) ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த சைவசித்தாந்தத் தத்துவ நெறிப் பெருஞ் சான்றோர் ஆவார். சிவஞான சுவாமிகள், கி. பி. 1785ல், விசுவாவசு ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நாளில் சிவபிரான் திருவடி நிழலிற் கலந்தருளினார். இவ்வுண்மை

மன்னுவிசுவாவசு வருடம் மேடமதி
உன்இரவி நாட்பகல் ஓது ஆயிலியம்–பண்ணும்
திருவாளன் எங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கும் தினம்.

என்னும் அழகிய வெண்பாவால், ஐயத்திற்கு இடமின்றிச் செவ்விதின் விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் அண்மைக்காலத்தில் விளங்கிய அரும்பெரும் புலவர்களின் வரிசையிலும், ஒப்புயர்வற்று முத்தமிழ்த்துறையின் முறை போகிய உத்தமப் பெருங்கவிஞர்களின் வரிசையிலும், தலைசிறந்த சான்றோர்களுள் ஒருவராகத் திகழ்பவர் நம் சிவஞானசுவாமிகள். தமிழ்ப் புலமை உலகிலும், சைவசித்தாந்தத் தத்துவ உலகிலும் பெரிதும் மதித்து தெய்வ நிலையில் வைத்து அனைவராலும் போற்றி வழுத்தப் பெறுபவர் சிவஞானசுவாமிகள். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மும்மொழிப் புலமை வேந்தர் பேராசிரியர் மறைமலை அடிகள் போன்ற எத்துணையோ பல பேரறிஞர்கள், நம் சுவாமிகளைத் தெய்வநிலையில் வைத்துப் போற்றிச் சிறப்பித்துப் பாராட்டி ஒழுகி வந்துள்ளனர்.

பலதுறைக் கலைஞர்

புலமை நலத்திற்குரிய துறைகள் எத்துணை உண்டோ, அத்துறைகள் எல்லாவற்றிலும் சிவஞானசுவாமிகள் பேராற்றல் பெற்றும் பிறங்கியிருந்தனர். புலமை நெறியில் அவர் தொடாத துறையுமில்லை, தொட்டுப் பொன்னாகாத பொருளும் இல்லை. இலக்கணம், இலக்கியம், கவிதை, உரைநடை, மொழிபெயர்ப்பு,

ஆராய்ச்சி, மறுப்புரை என்னும் இன்னோரன்ன பலவற்றிலும் சிவஞானசுவாமிகள் பெருந்தகையாளர், இத்துறைகள் அனைத்திலும் அவர் பல அரிய பெரிய நூல்களை இயற்றி அளித்திருக்கின்றார்.

சுருங்கக் கூறலுறின், அவரை ஒரு பெரும் பல்கலைக் குரிசில் (Versatile genius) புலமை வல்லாளர் (Intellectual giant) என்று கூறுதல் பெரிதும் பொருந்தும். உரையாசிரியர்களிற் சேனாவரையர் போன்று, சிவஞானசுவாமிகளும் வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்தவர். கம்பர் இராமபிரானைக் கூறுமாறு போல, நாமும் இவரைத் ''தென்சொற் கடந்த வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தார்'' என்று குறிப்பிடின், அஃது உண்மையாகுமேயன்றி வெறும் புகழ்ச்சியாகாது.

"கல்வி தறுகண் இசைமைகொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" என்று தொல்காப்பியனார் குறிப்பிடும் நான்கு வகைப் பெருமிதத்துள், கல்வி பற்றிய பெருமிதத்துக்கு உரியவராகப் பிறங்கியவர், நம் சிவஞான சுவாமிகள். ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்பதற்கேற்ப, எக்கொள்கையினையும் தம் கல்வி வல்லமையால் நிறுக்கவும் மறுக்கவும் வல்லவர் அவர். இலக்கண விளக்கச் சூறாவளி கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி, சிவசமவாத உரைமறுப்பு எடுத்து என்னும் சொல்லுக்கு இட்ட வைரக்குப்பாயம் முதலிய நூல்கள், சுவாமிகளின் அளப்பருங் கல்வியாற்றலை விளக்கும் நல்ல பெருஞ் சான்றுகளாக அமையும்.

சுவாமிகள் "மதிநுட்பம் நூலோடு உடையவர்" அவர்தம் நுண்மாண் நுழைபுலம் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைப்பது. 'தவத்தால் மனம் தூயராய் இறையருள் பெற்றே' அவர், உயர் சிவஞானபோத நூலுக்கு உரை வகுத்தனராதல் வேண்டும். வடமொழியிற் சங்கரர், இராமநுசர், மத்துவர் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் இயற்றியருளிய சிவஞானபோத மாபாடியம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானசித்தியார் உரை முதலியன, ஈடும் எடுப்பும் அற்றுப் பீடு மிக்குத் தலைசிறந்து திகழ்கின்றன. அன்பெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் கண்ணப்பர் ஆதல் போல, அறிவெலாம் ஒரு பிழம்பெனத் திரண்டவர் சிவஞானசுவாமிகள் எனலாம். திருஞானசம்பந்தர் போலச் சிவஞான சுவாமிகளும் ஞானத்தின் திருவுருவம் என்றலிற் பிழையில்லை.

சிவஞானபோதப் பேருரை

சிவஞானசுவாமிகள் தோன்றி அருளிற்றிலராயின் சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை, இந்நாளில் இத்துணை விளக்கம் பெற்றிருத்தல் இயலாது. சுவாமிகளின் சிவஞானபோதப் பேருரை நீலகண்டர், சங்கரர், இராமநுஜர், மத்துவர் முதலிய சான்றோர்கள், பிரம்மசூத்திரம் முதலிய நூல்களுக்கு வகுத்தருளிய பேருரைகளுக்கு நிகரானது எனலாம். வடமொழி, தென்மொழி என்னும் இருபெரு மொழிகளிலும் புலமை நிரம்பப் பெற்று தமிழில் மிகச் சிறந்த எழில்நலஞ் சான்ற உரைநடை வரையும் திறமும் வாய்ந்து, தாம் இயற்றியருளிய பற்பல நூல்களால் நம் தமிழ் மொழியினைப் பொற்புற மிக வளம்படுத்தி, வடமொழியறிவு வேண்டும் என்னும் யாப்புறவு இன்றியே, சைவசித்தாந்தத்தினை யாவரும் தம்முடைய நூல்களின் துணைகொண்டு, நாம் விளங்கிக் கொள்ளுமாறு செய்தமை நாம் பெரிதும் நன்றியுடன் பாராட்டுதற்குரியது. சைவசித்தாந்த மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்குதலில், சுவாமிகள் ஆற்றியுள்ள தொண்டு எல்லையில்லாதது. "நீளும் அத்தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்கவல்லார்".

காஞ்சிப்புராணம்

சைவசித்தாந்தத் தத்துவப் பொருள் நுட்பங்களை, உரையாசிரியர் என்னும் நிலையில் நின்று விளக்குவது மட்டுமேயன்றி, ஒரு பெருங்கவிஞராகவும் திகழ்ந்து, அவை தம்மை நம்மனோர்க்குப் புலங்கொள விளக்கும் பெருந்தகையாகவும் சுவாமிகள் இலங்குகின்றார். இதனை அவர் இயற்றிய காஞ்சிப் புராணம் என்னும் கவின்மிகு நூலிற் காணலாம். ‘‘கவிஞர்களின் இயல்பான உண்மை உளநிலைகள், அன்னோர் அவ்வப்போது கையாளும் உவமைகளின் வாயிலாக நிழலிட்டுப் புலனாகும்’’ என ஆராய்ச்சியாளர்கள் கூறும் உண்மையினை, நம்முடைய சுவாமிகள் சைவசித்தாந்த உவமைகள், தகவுறப் பெரிதும் வலியுறுத்துகின்றன. ஈண்டு ஒரு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் காண்போம்.

1. சிவஞான முனிவர் தாம் இயற்றும் காஞ்சிப்புராணம் என்னும் நூலுக்கு அவையடக்கம் கூறுகின்றார். ‘‘என்னுடைய பாடல்கள் வெறும் பிதற்றுரையாக இருந்தாலும், திருவேகம்பரின் தூயகதையினை உள்ளடக்கிக் கொண்டிருத்தலால் குற்றமற்றதாகவே விளங்கும். மாயா காரியப் பொருளாகிய சாணம், மண், கல்,

செம்பு முதலிய இழிந்த பொருள்களும்கூட, இறைவனின் திருவுருவச் சிலைகளாகச் செயற்படுமாயின், அருள்வடிவங்களாக மாறித் தூய்மையுற்றுச் சிறப்போங்கித் திகழ்தல்போல" (பிதற்றுரை–மாயாகாரியப் பொருள்கள்; நூலாதல்–சிலையாகி அருள் வடிவம் பெறுதல்)

மாயை காரிய உருக்களும் எம்பிரான் வடிவம்
ஆயவேல், அவை அருள்மயம் ஆகும் மற்று அதுபோல்
பேயனேன் பிதற்றுரையும் ஏகம்பர் தம்பெருமை
தூயகாதை உள்ளுறுதலால் துகளறத் தோன்றும்

2. கார்காலத்தில் நல்ல பெருமழை பல நாட்கள் தொடர்ந்து பொழிகின்றது. அதனால் பறவைகளும் விலங்குகளும் வெளியே செல்ல இயலாமல் வருந்திக் கொண்டிருக்கின்றன. பின்னர் மழை நின்றொழிகின்றது. ஆயினும் தூவானம் விடாமல், மரஞ்செடி கொடிகளினின்று நீர்த் திவலைகள் காற்றினால் இடையீடின்றிச் சிதறிக் கொண்டுள்ளன. இங்ஙனம் அடைமழை விட்டும் செடிமழை விடாமையால், விலங்குகளும் பறவைகளும் மேலும் சின்னாட்கள் வருந்த நேரிடுகின்றன. இந்நிலைமை ஞானம் எய்தியபொழுது ஆணவமலமானது வலிகுன்றித் தேய்ந்தொழியுமாயினும், வாசனாமலம் தாக்கி உயிரை மேலும் சிலகாலம் வருத்த முயலுதலைப் போல உள்ளது. (மழை நிற்றல் – ஆணவமலம் கெடுதல்; தூவானம் துவற்றல்–வாசனாமலம் தாக்குதல்)

போதம்மே லாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்து
வாதனை தாக்குமாபோல், மழைபெயர் மாறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும் மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம் நுண்துளி துவற்றும் மாதோ!

. . . தொடரும்

நூலகம்-TAMIL DIGITAL LIBRARY

அன்புநெறி இதழ்கள் எண்ணிமப் படுத்தும் நூலக **WWW.NOOLAHAM.ORG** என்ற இணையத்தளத்தில் ஆவணப்படுத்தப் படுகின்றன.
அன்புநெறி இதழ்கள் நூலகத்தில் **ஆவணவகைகளில்**, **இதழ்கள்** என்ற பகுப்பில் வைக்கப்பட்டு வருகின்றன.
அன்பர்கள் நூலக இணையத் தளத்தில் பார்த்துப் படிக்கலாம்.
தொடர்புகளுக்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா
Email:- saivamanram@gmail.com

ஆசான் அருளால் ஆசானாயினார்

(தவத்திரு செல்லத்துரை சுவாமி)

ஞானியர் நாட்டம்



சுவாமிகள் கிளிநொச்சியில் தொழில் புரியும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897). அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்துடன் பங்கு பற்றினார். கோட்டையிலிருந்து இந்துக்கல்லூரி வரை சென்ற ஊர்வலத்திலும், பின்னர் கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண்டனர். பின்னாட்களில் அவர்தம் அன்பர்களிடத்து ''விவேகானந்தர் மேடையில் இருபக்கங்களிடையேயும் சிங்கக்குட்டி போல் உலாவிக்கோண்டு பேசினார்'' எனவும் ''அவர் பேசினார் என்பதிலும் சிங்கம் போல் கர்ச்சித்தார்'' என்பதே சரி எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகள் அன்பர்களுக்குக் கூறியிருக்கிறார். **''விடயம் பெரிது நேரமோ குறுகியது''** (The Subject is large but the time is short) என்பதே அவ்வாசகமாகும். விவேகானந்தருடைய வருகை தொடர்பாகச் சுவாமிகள் உற்சாகமாகக் கூறிய விடயங்கள் இளமைக் காலத்திலே அவரிடத்தில் மண்டிக் கிடந்த ஞானியர் நாட்டத்தை ஒருவாறு உணர்த்துவனவாய் இருந்தன.

கோயில் வழிபாடு

அன்னையின் கையைப் பிடித்துக் கொண்டு நல்லூருக்குச் சென்ற பிள்ளைப் பராயந் தொட்டு நல்லூரான் அவர் சிந்தையிற் குடி கொண்டிருந்தான். நல்லூர் வீதியை வலம் வருவதும், வீதியில் விழுந்து கும்பிடுவதும் அவருக்கு உருக்கமான அனுபவங்களாய் அமைந்தன. சண்பக மரத்தடியில் நிற்கும் சாதுக்கள் கூட்டத்தை அவதானித்து நிற்பதில் அவர் மகிழ்ச்சி கண்டார். வகைவகையான பச்சையரிசி, வாழைக்குலை, தேங்காய் முதலிய பூசனைப் பொருட்களை உவகையுடன் கொண்டுவந்து உதவும் அன்பர்களைக் கண்டு ஐம்புலன் அடங்கி நிற்கும் அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டன. அவர் அந்தணர்கள் அஞ்சடுக்குத் தீபம் முதல் அடுக்கடுக்காய் தீபங் காட்டத் தரிசனந் தந்து நிற்கும்

சோதிப்பிரகாச வேலனைத் தரிசித்துக் கண்கள் பனியரும்புதிர நின்றனர். ஆகையால் நல்லூர்த் திருவிழாக் காலத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்து எந்நாளும் நல்லூரைவலம் வந்து வணங்கினார். திருவிழாக்காலங்களில் அங்கப் பிரதட்டினம் செய்து நல்லூர் வீதியை வலம் வருவது அவரது நியமமாயிருந்தது. ஒரு முறை கொழும்புத்துறையிலிருந்து நல்லூருக்கு அங்கப்பிரதட்டினம் செய்தனரென முன்னர் குறிப்பிட்ட வைத்திலிங்கம் என்பவர் கூறினர்.

ஞானநூற்பயிற்சி

வைத்திலிங்கம் என்பார் கூறிய இன்னொரு முக்கிய விடயம், சுவாமிகள் அந்நாட்களில் நீண்ட நேரத்தைச் சமய நூல்களை வாங்கிப் பாடமாக்குவதில் போக்கினார் என்பதாகும். ஆறுதலும் ஓய்வும் நிறைந்த அவர்பார்த்த உத்தியோகம் நூல்கள் படிப்பதற்கு வாய்ப்பானதொன்றே. அவர் பெரும்பாலான சமயத் திருநூல்களைக் கற்றவர். தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் உள்ள ஞானநூல்கள் பலவற்றையும் கற்றனர். அவையெல்லாம் சிரமப்பாடு எதுவுமின்றி அவருக்கு மனனமாயின. அவருடைய உள்ளம் பளிங்கு போல் தூயதாய் இருந்தமையால் இவ்வாறு இலகுவில் மனனமாவது இயல்பாயிற்று. சைவத் திருமுறையையும் தமிழ் மறையாம் திருக்குறளையும் ஆர்வத்தோடு படித்தார். இப்பொழுது சிவதொண்டன் நிலையத்தினர் தொகுத்து வெளியிட்டிருக்கும் சைவத்திருமுறைத் திரட்டு என்னும் நூலிலுள்ள பாடல்கள் யாவும் சுவாமிகள் அவ்வப்போது தம் நினைவிலிருந்து சொன்ன பாடல்களே என்பது பலருக்கு வியப்பாக இருக்கும். பெரும்பாலான திருக்குறளும், ஔவைமொழியும் அவருக்கு மனனமாயிருந்தன. தாயுமானார் பாடல்களையும், பட்டினத்தடிகள் திருநூல்களையும், சித்தர் பாடலையும் கற்றனர். அக்காலத்தில் திருவிழாக்காலங்களில் ஏராளமான சிறுநூல்கள் விற்பனையாவது வழக்கமாயிருந்தது. அவற்றுள் சிறந்த ஞானநூல்களாய் உள்ளவற்றை ஆர்வத்தோடு வாங்கிப் படித்தனர். அவ்வாறான நூல்களுள் **குருநமசிவாயர்** என்பார் பாடிய **நமசிவாயமாலையும்** ஒன்று என்பதையும், அந்நூல் முழுவதும் சுவாமிகளுக்கு மனனமாயிருந்தது என்பதை நாமறிவோம். பின்னர் சுவாமியின் பணிப்பின்படி அந்நூலைத் தட்டச்சு செய்து பலரும் படித்துப் பயனடையுமாறு வெளியிட்டோம். சுவாமிகள் தாமும் குருநமசியவாயர் பாடியது போன்று ஒரு நமசிவாய மாலை பாடினார். அந்நாட்களில் பிரபலமாயிருந்த ஒரு

ஞானநூல் **தத்துவராயசுவாமிகள்** பாடிய '**பாடுதுறை**' என்னும் நூலாகும். அந்நூல் குருநெறிச் சென்று பெற்ற அநுபூதிஞானத்தைப் பயிலுந் தமிழிலும் எளிமையான மெட்டிலும் இனிமையாகக் கூறுவது. பரந்த தமிழ் நூற்பரப்பிலே சுவாமிகள் பாடியது போன்று ஒரு '**பல்லிப்பாட்டு**' '**பாடுதுறையில்**' மட்டுமேயுள்ளது. சிறந்த தத்துவநூற் புலவரான தத்துவராயரது ''பாடுதுறை''யைச் சுவாமிகள் நன்றாக மனதிற் பதித்துக் கொண்டனர்.'**பகவத்கீதை**' முதன்மையான **உபநிடதங்கள்**, சங்கராச்சாரியாரது '**பிரமசூத்திரபாஷ்யம்**' முதலிய வடமொழியிலுள்ள ஞானநூல்களையும் கற்றுத் தேர்ந்தனர். **விவிலிய வேதத்திலுள்ள** திருவசனங்கள் பல அவருக்கு மனனமாயிருந்தன. பிற்காலத்தில் சுவாமியை அண்டி வாழ்ந்தவரான சந்தசுவாமி விவிலிய வசனங்கள் பலவற்றின் உட்பொருளைச் சுவாமிகளின் வாய்மொழியிலிருந்தே தெளிவாக விளங்கிக் கொண்டதாகக் கூறினார். '**குணங்குடி மஸ்தான் சாகிபு**' **பாடல்களும்**, இஸ்லாமியத் திருமறையான '**குர்ஆனின்**' வசனங்கள் பலவும் அவருக்கு மனனமாயின. பின்னாட்களில் தன்னையண்டி வந்த நூலறிவாளர் பலரையும் தன் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கச் செய்யும் கலை ஞானத்தை இந்நாட்களில் சுவாமிகள் ஈட்டிக் கொண்டனர்.

கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்திலே பிரமசரிய விரதம் பூண்டிருந்த சுவாமிகள் ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வு, வணக்கம் மணக்கும் வேலை, கடவுட்பக்தி, ஞானியர்நாட்டம், ஞானநூற் பயிற்சி என்னும் இயல்புகள் முதிர்ந்து ''இறைகளோடிசைந்த இன்பம், இன்பத்தோடிசைந்த வாழ்வு'' வாழ்வதற்குத் தகைமையான ஒருவராய் மலர்ச்சி பெற்றிருந்தார். இவற்றையெல்லாம் சுவாமிகளின் அலுவலகத் தலைவராகப் பதவிவகித்த பிறெளனி எனும் ஆங்கிலேயர் கூறிய வசனம் திரட்டித் தருகிறது. அவர் ''நீர் ஒரு தெய்வீக மனிதர் (You are a God-fearing man)'' எனத் தம்மை நோக்கிக் கூறியதாகக் கதையோடு கதையாச் சுவாமிகள் எமக்குக் கூறினர்.

..தொடரும்

அன்பிலா ரோடுறவு கொள்ளாதே அடுத்தோருக்குத்
துன்பத்தைச் செய்யாதே சூதும் வாதும் பேசாதே
இன்பத்தில் துன்பத்தில் ஏகமனசாயிருந்து
தென்புடனே யரன்பாத மந்திசந்தி சிந்திநெஞ்சே.

–யோகர்சுவாமி

சென்ற இதழ் 4 இன் தொடர்ச்சி.....

சிவாஞானபாடியத்தில் சத்தும் அசத்தும்

(சித்தாந்தச் செம்மணி முனைவர் கோமதி சூரியமூர்த்தி
அன்புநெறி சிறப்பாசிரியர்)

சத்தும் அசத்தும் ஒன்றை மற்றொன்று அறியா

சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது. இதனை

"யாவையும் சூன்யம் சத்து எதிர் ஆகவின்"
(சிவஞானபோதம், சூத். 7)

என்றார் மெய்கண்டார். சூத்திரத்தில் வரும் சூன்யம் என்ற சொல் விளங்கித் தோன்றாது எனப் பொருள்படும். இதனைச் "**சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது**" என்ற மேற்கோள் உறுதி செய்யும். அசத்துப் பொருள் சூரியன் முன் இருள்போல் இறைவன் முன் விளங்கித் தோன்றாது என்பதற்கு,

"முனைத்திடா அசத்துச் சத்தின் முன்,
இருள் இரவி முன்போல்" (சிவஞானசித்தியார், 249)

என்பதைச் சிவஞானமுனிவர் மேற்கோளாகக் காட்டுகின்றார். (பேருரை, ப. 858).

சத்து (அசத்து) அறியாது

பசு பாசங்கள் இறைவனது வியாபகத்துள் வியாப்பியமானவை. எனவே சத்தாகிய சிவன் அவற்றைச் சுட்டி அறியான். இறைவனுக்குச் சுட்டுணர்வு இல்லை என்பதைச் சிவஞானமுனிவர் மற்றொரு முறையிலும் விளக்குகின்றார். முக்திநிலையில் ஆன்மா சிவத்தைச் சார்ந்திருக்கும் பொழுது சுட்டறிவு நிகழாது. சுட்டறிவு நிகழாமைக்குச் சிவத்தைச் சார்ந்ததே காரணம் ஆகும். எனவே அநாதி மலமுத்தனாகிய முதல்வனுக்குச் சுட்டுணர்வு இல்லை என்பது பெறப்படுதலின், அத்தகைய சிவம் சுட்டறிவு உடையது என்பது பொருந்தாது என சிவஞானமுனிவர் விளக்குகிறார். முற்றுணர்வுடைய சிவம் அசத்துப் பொருட்களை அறிவதாகிய சுட்டுணர்வும் உடையது என்று கொண்டால் என்ன என்று சிவாத்துவித சைவர் வினவுவர். சுட்டுணர்வு எனப்படுவது வரையறைக்கு உட்பட்டது. வரையறைக்கு உட்பட்ட இச்சுட்டுணர்வு முற்றுணர்வைக் கட்டுப்படுத்தி அது நிகழவொட்டாமல் தடுப்பது.

ஆதலால் சுட்டுணர்வு இல்லாமை சிவனுக்கு மேம்பாடே தவிர இழக்கில்லை. அறியாது என்பது அனுபவியாது என்று பொருள்படும் என்பர். **சுட்டி அறிதலும், அனுபவித்தலும் இறைவனுக்கு இல்லை.**

அசத்து சத்தை அறியாது

"**அசத்து இலது அறியாது**" (சூத், 7) என்பதற்குச் சிவஞானமுனிவர் அசத்தாகிய பாசம் அறிவற்ற சடம் ஆகையால் சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது எனப்பொருள் கூறுகின்றார் (பேருரை, ப. 853)

"**இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது**" ஏழாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தின் மேற்கோள் ஆகும். அதற்கு உரை கூறப்புகுந்த சிவஞானமுனிவர், "**ஈண்டு அசத்து என்றது தத்துவப் பிரபஞ்சத்தை (கருவிகள்). ஏனையப் பிரபஞ்சத்திற்கு (உலகு நுகர்ச்சிப் பொருள்) அறிவு உண்டு எனக் கொள்வார் யாரும் இலர்**" என்கின்றார். அவர் அவ்வாறு கூறுவதிலிருந்து கருவிகட்கு அறிவுண்டு என்று கூறுவாரும் உளர் என ஊகிக்கலாம். அவ்வாறு கூறுபவர் சங்கிராந்தவாத சைவர் ஆவர். இவர்கள் உலகமும், உலகப் பொருட்களும் அறிவற்றன என்பது தெளிவு. ஆனால் கருவிகள் (ஞானேந்திரியங்கள், மனம் முதலிய அந்தக்கரணங்கள்) அறிதலாகிய தொழிலைச் செய்வதால் அவற்றை அறிவற்றன என்று கூறுதல் பொருந்தாது என்பர்.

அவர்கட்குப் பின்வருமாறு சிவஞானமுனிவர் விடை கூறுகிறார். பாலை நிலத்தில் தோன்றும் பேய்த்தேரை (கானல் நீரை) நீர் என்று கருதிப் பருகும் வேட்கையுடன் நெருங்கும் மடவோனுக்கு அப்பேயத்தேர் நீராதலின்றி அசத்தாம் தன்மை போல, கருவிகளின் இயல்பை உள்ளவாறு உணராதவர்கட்கே அவை அறியுடையனவாகத் தோன்றும். ஞானாசிரியரது அருள் உபதேசம் கிடைக்கப்பெற்று அக்கருவிகளின் இயல்பை ஆராய்வார்க்கு அவை அறிவற்றவை என்ற உண்மை தெளிவாகும் என்கின்றார் (சிவஞானபோத உதாரண வெண்பா 41இன் உரைவிளக்கம், பேருரை, ப. 866).

சத்ததையும், அசத்தையும் அனுபவிப்பது ஆன்மா

சத்தும், அசத்தும் ஒன்றையொன்று அனுபவியா என்றால்

இவ்விரண்டையும் அனுபவிப்பது எது என்ற வினா எழும். பாரிசேட அளவையால் ஆன்மா என்பது உணரப்படும். சத்தும், அசத்தும் ஆன்மாவினாலும் அறியப்படா என்றால் அவ்விரு பொருட்களும் பயனற்றவை ஆகிவிடும். எனவே ஆன்மா இரண்டையும் அறியும் அறிவு உளதே என்பது பெறப்படும். **ஞாயிறும், உலகத்துப் பொருட்களும் ஒன்றை ஒன்று அறியாது எனினும் அவை இரண்டையும் அறிகின்ற கண் அவற்றுக்கு வேறாய் இருத்தல் போல** என்கின்றார் சிவஞானமுனிவர் (பேருரை, ப. 868),

சத்தையும் அசத்தையும் ஆன்மா அறியும் முறை

"இருதிறன் அறிவுள்ளது ஆன்மா" (சூத். 7)

ஆன்மா சத்தையும் அசத்தையும் அறியும் என்பது முன்னர்க் கூறப்பட்டது. எப்படி அறியும் என்பது வினா? இருதிறன் அறிவு என்ற தொகைச் சொல்லை மூன்று விதமாக விரித்துப் பொருள் காண வேண்டும் என்கின்றார் சிவஞானமுனிவர்.

1. **இருதிறனையும் அறியும் அறிவு:** இரண்டாம் வேற்றுமை தொகைப் பொருள். பெத்தத்தில் அசத்தாகிய உலகத்தையும், முக்தியில் சத்தாகிய சிவத்தையும் ஆன்மா அறியும்.

2. **இரு திறனால் விளங்கிய அறிவு:** மூன்றாம் வேற்றுமை தொகைப் பொருள். ஆன்மா அறிவிக்க அறியும் உபதேசி. பெத்தத்தில் அசத்தாகிய கருவிகளின் வழி திரோதானசக்தி அறிவிக்க அறியும். முக்தியில் அருட்சக்தி அறிவிக்க அறியும்.

3. **இருதிறனில் அழுந்தும் அறிவு:** ஏழாம் வேற்றுமைத் தொகைப்பொருள், பெத்தத்தில் அசத்தாகிய ஐம்புல விடயங்களில் ஆன்மா அழுந்தும். முக்தியில் ஆன்மா சிவத்தோடு அழுந்தும்.

இம்மூவகை விளக்கங்களால் மறுக்கப்படும் பிற மதங்கள் பற்றி சிவஞானமுனிவர் பாடியத்தில் கூறுகின்றார். அவை இக்கட்டுரைத் தலைப்பிற்குத் தேவையில்லை என்று இங்கு கூறப்படவில்லை.

....தொடரும்

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்.

பொருள் : பசுபதி ஆகிய இறைவன் என்றுமுள்ள உயிர்கள் சிவத் தன்மையை அடையத் துணைபுரிகின்ற சக்தியிலிருந்து பிரிக்க இயலாத முழுப் பொருள் / பூரணன் ஆவான்.

மன்றத்தில் நிகழ்ந்தவை

திருவள்ளுவர் குருபூசை

திருவள்ளுவர் குருபூசை மார்ச் மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில், நடை பெற்றது. வழிபாடு மாலை 7:00 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து திருவள்ளுவர் பற்றிய பேச்சுக்கள் இடம் பெற்றன. மாணவர்கள் வகுப்புரீதியாகத் தங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளை ஆயத்தப்படுத்திச் சிறப்பாகப் பேசினார்கள். இறுதி வழிபாட்டுடன் குருபூசை நிறைவு பெற்றது.

சிவராத்திரி வழிபாடு

சிவராத்திரி வழிபாடு மார்ச் 13ம் திகதி சனிக்கிழமை யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில், நடை பெற்றது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. வழிபாடு மாலை 6:00 மணிக்கு ஆரம்பித்து நள்ளிரவு லிங்கோற்பவ காலத்துடன் நிறைவுற்றது. சிவலிங்கத்திற்கு பால் அபிடேகமும் சிறப்புப் பூசைகளும் இடம் பெற்றன. சிவபுராணம், நமச்சிவாயப் பதிகங்கள், யோகர் சுவாமிகள் நமச்சியவாயப் பத்து முதலியனவும் சிவநாமங்களும் மாறி மாறி பக்தர்களால் ஓதப்பெற்றன. சிவராத்திரி பற்றி மாணவர்களது பேச்சுக்களும், வாசிப்புக்களும் இடம் பெற்றன. தங்கள் தங்கள் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளை சிறப்பாகப் பேசினார்கள். வழிபாடு நான்கு பூசைகளாகப் பிரிக்கப்பட்டு லிங்க அபிடேகமும் சிறப்புப் பூசையும் இடம் பெற்றன. மன்ற உறுப்பினர்கள் சிறப்பு உபயமாக எடுத்துச் செய்தமை குறிப்பிடத் தக்கது. நள்ளிரவு 12:30 வழிபாடு நிறைவுற்றது.

சிவயோகசுவாமிகள் குருபூசை

சிவயோக சுவாமிகள் குருபூசை மார்ச் மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில், நடை பெற்றது. வழிபாடு மாலை 7:00 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து சிவயோக சுவாமிகள் பற்றிய மாணவர்களது பேச்சுக்கள் இடம் பெற்றன. மாணவர்கள் வகுப்புரீதியாகத் தங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளை ஆயத்தப்படுத்திப் பேசினார்கள். சிவயோக சுவாமிகள் பாடிய நற்சிந்தனைப் பாடல்களும் மாணவர்களும், பெரியோர்களும் பாடினார்கள். இறுதி வழிபாட்டுடன் குருபூசை நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அன்பர்களுக்கு உணவு வழங்கப் பெற்றது. இக்குருபூசையினை திரு. ஸ்கந்தகுமார் குடும்பத்தினர் உபயமாக எடுத்துச் செய்தனர்.

சென்ற இதழ் தொடர்ச்சி.....

நம்பியாரூரர்

(திருமுறைமணி புலவர் எ. வேலாயுதன்)

உயர் திருத்தொண்டின் உண்மைத் திறம்.

திருப்புகலூரில் நந்தவனப் பணி செய்து பூசனைத் திருத்தொண்டின் நிகழும் முருகநாயனாரின் திருமடத்தில், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்

நீலநக்கடிகளும் நிகழ் சிறுத்தொண்டரும்
உடனணைந்து எய்து நீர்மைச்
சீலமெய்த்தவர்களும், கூடவேகும்பிடும் செய்கை
நேர்நின்று வாய்மை
சாலமிக்குயர் திருத்தொண்டின் உண்மைத் திறம்
தன்னையே தெளியநாடிக்
காலமுய்த்வர்களோடு அளவளாவிக்கலந்து
அருளினார் காழிநாடர். (திருஞான–புராண. 523)

என்கின்றார் சேக்கிழார். இத்திருப்பாடலில் முதலிரண்டு அடிகளில் திருத்தொண்டர் திருக்கூட்டம் உடனணைந்து எய்தும் ஒழுக்க சீலமிக்க தன்மையும் தத்தமில் கூடி தலையினால் வணங்கும் செய்கையும் தெளியவுணர்த்தி, வாய்மைசாலமிக்கு, உயர்திருத்தொண்டின், உண்மைத்திறம் தன்னையே தெளியநாடி. . . அளவளாவிக் கலந்தருளினார் என்ற தொடர்களுள் வாய்மை சாலமிக்கு என்றதனால்.

வாய்மை எனப்படுவது ---- யாதொன்றும் தீமையிலாத சொலல் என்னும் திருக்குறளின் இலக்கியமாய்த் தீதிலாத் திருத்தொண்டு வாய்மைசால மிக்குடையது எனவும் உயர்திருத்தொண்டு என்றதனால் உலகினை ஓங்குவிப்பது உயிர்களை உய்விப்பது எனவும் உண்மைத் திறம் என்றதனால் மக்கள் வாழ்வின் உண்மைத்திறம் திருத்தொண்டே எனவும் அவ்வுண்மையை நோக்கித் தெளிவாக அனைவரும் உணர அளவளாவிக் கலந்தருளினார் காழிநாடர் என்றும் தெரிய உணர்த்துகின்றார் சேக்கிழார்.

இத்திருப்பாடலில் தமிழகத்தே தொன்றுதொட்டு மக்கள் போற்றிவரும் திருத்தொண்டின் உண்மைத்திறமே! நாடித் தெளிய அளவளாவி அருளினார் திருஞானசம்பந்தர் என்னும் செய்தி தமிழகத்தின் பண்டைத் திருநெறி திருத்தொண்டே எனத் தெரிவிக்கின்றதும் காணலாம்.

மற்றும் திருநீலகண்டப் பதிகத்துள் திருத்தொண்டின் முதன்மையை **கைவினை செய்தெம்மிரான் கழல்போற்றுதும் நாமடியோம்** என்று குறிப்பிட்டு உணர்த்தித் திருஞானசம்பந்தர் தெளிவிப்பதனைக் காண்க!

தேசம் உய்ய வந்த திருத்தொண்டத் தொகை

தமிழகத்தே தொன்று தொட்டு வரும் அன்புமிகு திருத்தொண்டின் உண்மைத்திறம் பிறவற்றின் கலப்பினால் உதிரிப் பூக்களாக ஆங்காங்கே இருந்தன. புலம் பெயர்ந்து வந்த பிறநெறிகளின் ஆதிக்கம் பெருகி நிலைபெற முனைந்தபோது திருத்தொண்டின் வழிவழி வந்த ஆதிசைவரே அதனை விடுத்து உறுதியிலா அரச வாழ்வை உகந்தபோது திருத்தொண்டின் மலர்ந்த இறை அடியர்களைத் தொகுத்து தமிழ் மாலையாகத் திருத்தொண்டத் தொகை இறையருளால் வாய்த்தது தமிழ்செய்தவப் பயனேயல்லவா?

அப்பரும் பிள்ளையாரும் திருத்தொண்டினை எழுச்சி பெற்று விளங்கச் செய்தனர். அத்திருத்தொண்டின் வாழ்ந்து நலம் பெற்ற திருத்தொண்டர்களை இறையருளால் போற்றி உலகிற்கு உய்யக் காட்டி அருளினார். ஆதிசைவர்களின் குலதிலகமென விளங்கும் நம்பியாரூரர், இத்திருத்தொண்டத்தொகையைப் பாடியருளி சிவபெருமானின் திருக்கோயில் திருத்தொண்டின் பூசனைத் திருநெறியின் அன்பு பூண்ட அடியார், யாவரேயாயினும், அவர் எல்லார்க்கும் அடியேன் என்றும் அப்பாலும் அடிசார்ந்தார்க்கும் அடியேன் என்றும் தெரிய உணர்த்துகின்றார். இத்தன்மையால் திருக்கோயில் பூசனைத் திருத்தொண்டு திருநீற்றின் அன்புடைய மக்கள் யாவர்க்கும் உரியதென்றே தெளிய உணர்த்திக் கொண்டுள்ளார். சைவ முதற் திருத்தொண்டராக விளங்குகின்றார். அவர்தம் திருவுளப் பாங்கின் வண்ணம் அன்புறுதொண்டர் யாவரும் திருக்கோயில் பூசனை முதலிய திருநெறித் தொண்டாற்றும் வாழ்வினை, இறைவன் விரைந்தருள வேண்டுவோம்.

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணி கண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லாவுயிரும் தொழ எடுத்து
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன்
வாசமலர்மென் கழல் வணங்க வந்தபிறப்பை வணங்குவாம்.

(சண்டேசர் புரண–67)

என்று தெய்வச் சேக்கிழார் வழிபட்டு உணர்த்துமாறு நேசம் நிறைந்த உள்ளத்தால் தேசம் உய்ய வந்த திருத்தொண்டத் தொகையருளிய நம்பியாரூரர் திருவடியைப் போற்றி வணங்குவாம். வணங்குவதே தமிழர்க்கு வாழ்வும் ஆகும்.

முற்றும்

நீத்தார் நயப்புரை

அமரர் திருமதி ஞானலட்சுமி கந்தையா

சைவசித்தாந்தப் பேரறிஞர் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களின் மனைவி திருமதி ஞானலட்சுமி கந்தையா அவர்கள் தமது எண்பத்தேழாவது அகவையில் புதன்கிழமை 27–1–2010 அன்று சிவபதம் எய்தினார். இவரின் பெற்றோர் ஏழாலை மேற்கைச் சேர்ந்த சீனியர் தையல்முத்து தம்பதிகளாவர். இவர்களின் ஏகபுத்திரியாக ஞானலட்சுமி 09–03–1923 இல் பிறந்தார். இவருக்கு மணப்பருவம் வந்தபோது பண்டிதர் மு. கந்தையா அவர்கள் மனம் நிறைந்த கணவராக வாய்த்தார்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

எனத் திருவள்ளுவர் காட்டிய வாழ்வியல் நெறிமில் இல்லறத்தை நல்லறமாக நடத்தினர்.

இவர்களின் இல்லற வாழ்வின் பேறாக சுசீலாதேவி, சத்தியபாமா என்னும் இரு பெண்குழந்தைகள் பிறந்தனர். அவர்களை வளர்த்து, கல்வி புகட்டி, திருமணம் செய்து வைத்துப் பேரப் பிள்ளைகளையும் காணும் பேறு பெற்றனர்.

தம் கணவர் உலகம் போற்றும் சிதாந்தப் பேரறிஞராக மலர்வதற்கு ஏற்ற இல்லாளாக இல்லறப் பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு அவர் பண்டிதமணியாக, மகா மகோ உபாத்தியாயராக, யாழ் பல்கலைக்கழக இலக்கிய கலாநிதியாக பல அரிய ஞான நூல்களின் ஆசிரியராகப் புகழ் பெற்றதைக் கண்டு இன்புற்று மகிழ்ந்தார்.

திருமதி ஞானலட்சுமி கந்தையா அவர்களின் ஆன்மா சிவபெருமானின் திருவடிப்பேற்றைப் பெறவும், மக்கள், குடும்பத்தவர், துயரம் நீங்கி மனஅமைதி பெறவும் கனடா சைவ சித்தாந்த மன்றத்தினர் சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்கி வழிபடுகிறோம்.

போற்றி ஓம் நமசிவாய!

சிறுவர் பகுதி

சென்ற இதழின் தொடர்ச்சி.....

ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை-2

5. சைவபேதவியல்

108 சிவபெருமானைச் சிவாகம விதிப்படி வழிபடுவதற்கு யோக்கியதையைப் பிறப்பிப்பது யாது?

சிவதீட்சை

109. சிவதீட்சை பெற்ற பின் அவசியமாக அநுட்டிக்கப்படும் கருமங்கள் எவை?

இயம நியமங்களும், சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை, தேவார திருவாசக பாராயணம், சிவாலய கைங்கரியம், சிவாலய தரிசனம், குருவாக்கிய பரிபாலனம் இயன்ற மட்டும் மகேசுர பூசை முதலியவைகளுமாம் (கைங்கரியம் – தொண்டு)

110. இயமம் என்பன யாவை?

கொல்லாமை, கள்ளாமை, பிறர் மனைவியரையும் பொது மகளிரையும் விரும்பாமை ஆகிய ஆண்டகைமை, இரக்கம், வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், கசியுடைமை என்னும் பத்துமாம்.

111. நியமம் என்பன யாவை?

தவம், மனம் உவந்திருத்தல், கடவுள் உண்டென்னும் விசுவாசம், பாவத்துக்குப் பயந்து தேடிய பொருளைச் சற்பாத்திரமாய் உள்ளவர்களுக்குக் கொடுத்தல் தன்னின் மூத்தோரை வழிபடுதல், உயிருக்கு உறுதி பயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலம் செல்வம் அதிகாரம் முதலியவைகளினாலே கருவமின்றி அடங்கி ஒழுகுதல் தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்துமாம்.

112. அநுட்டிக்கலாகாத கருமங்கள் யாவை?

சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, சிவசாத்திரநிந்தை, தேவத்திரவியங்களை உபயோகம் செய்தல், உயிர்க்கொலை முதலியவைகளாம்.

113. அநுட்டானத்தில் வழுவிய பாவங்கள் எப்படி நீங்கும்?

அறியப்பட்ட பாவங்கள் பிராயச் சித்தங்களினாலே நீங்கும். அறியப்படாத பாவங்கள் அந்தியேட்டிக் கிரியையினாலே நீங்கும்.

114. தீட்சை பெற்றும் தத்தமக்கு விதிக்கப்பட்ட சைவாசாரங்களை அநுட்டியாது விடுத்தவர் யாது பெறுவர்?

பைசாசபுவனத்திற் பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை அநுபவிப்பர்.

115. சிவதீட்சை பெற்றுச் சிவபெருமானை வழிபடுவோர்கள் யாது பெயர் பெறுவார்கள்?

சைவர் என்னும் பெயர் பெறுவார்கள்.

116. சைவர்கள் சாதி பேதத்தினால் எத்தனை வகைப்படுவர்?

ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்தியசைவர் என அறுவகைப்படுவார்கள்.

117. ஆதிசைவராவர் யாவர்?

அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களிலும் தீட்சிக்கப்பட்ட இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவராகிய சிவப்பிராமணர்.

118. மகாசைவராவர் யாவர்?

பிரம்மாவினுடைய முகங்களிற் தோன்றிய இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவர்களாகிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீட்சை பெற்றவர்.

119. அநுசைவராவார் யாவர்?

சிவதீட்சை பெற்ற சத்திரியரும், வைசியரும்.

120. அவாந்தரசைவராவார் யாவர்?

சிவதீட்சை பெற்ற சூத்திரர்

121. பிரவரசைவராவார் யாவர்?

சிவதீட்சை பெற்ற அநுலோமர்

122. அந்தியசைவராவார் யாவர்?

சிவதீட்சை பெறிற பிரதிலோமர் முதலிய மற்றைய சாதியர்.

123. சைவர்கள் தீட்சா பேதங்களினால் எத்தனை வகைப் படுவார்கள்?

சமயதீட்சிதர், விசேடதீட்சிதர், நிருவாணதீட்சிதர், ஆசாரியர் என நால்வகைப்படுவர்.

தொடரும்

சென்ற இதழின் தொடர்ச்சி..... **சைவபோதம்-2**

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், பி. ஏ. அவர்கள்)

ஏழாம் அதிகாரம்-சிவபெருமானின் மூர்த்தங்கள்

நடேசப் பெருமான்

நடேசப் பெருமானுடைய ஒரு திருக்கரத்திலே உடுக்கை இருக்கின்றது. அது படைத்தலாகிய தொழிலைக் குறிக்கின்றது. அபயமாகிய ஒரு திருக்கரம் காத்தலாகிய தொழிலைக் குறிக்கிறது. வேறொரு திருக்கரத்திலே நெருப்பு இருத்தல் அழித்தலைக் குறிக்கின்றது. ஊன்றி நிற்கின்றதாகிய ஒரு பாதம் மறைத்தலைக் குறிக்கின்றது. உயர்த்திய மற்றப் பாதம் அருளலைக் குறிக்கின்றது.

"தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

நடேசப் பெருமானுடைய திருவுருவத்திற்கு இன்னும் அநேக பொருள்கள் உண்டு. தீட்சை பெற்றவர் அவைகளை "உண்மை விளக்கம்" என்ற நூலிலே பார்த்து அறிக.

குறிப்பு: மேலே சொல்லப்பட்ட மூர்த்தங்கள் நாம் கடவுளை வழிபடுதற்காக அவரால் விதிக்கப்பட்டவையாம். இவற்றைப் பற்றிய வேறு சில உண்மைகள் ஒரு குருவுக்கும் சீடனுக்கும் நடந்த சம்பாஷணையாகக் கீழே காட்டப்படுகின்றன.

சிஷ்யன்: கோயிலிலே காணப்படும் இந்தத் திருவுருவங்கள் கடவுளா? அல்லது கடவுளுடைய அடையாளங்களா?

குரு: அந்தத் திருவுருவங்கள் அடையாளங்கள் அல்ல. அவை கடவுளேயாம் ஏனென்றால் கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றார். ஆதலாலே அந்தத் திருவுருவங்களிலும் நிறைந்திருக்கின்றார். ஆதலால் அவை கடவுளேயாம்.

சிஷ்யன்: தெருவிலே ஒரு கல்லை அல்லது மரத்தைக் கடவுளென்று கும்பிடலாமா? அவைகளிலும் கடவுள் நிறைந்திருக்கிறார்தானே.

குரு: நமக்குப் பிரியமானால் அவைகளையும் கும்பிடலாம். கோயிலிலுள்ள திருவுருவங்களிலே கடவுளுடைய தன்மைகளைக் காட்டும் அறிகுறிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இவை தியானத்துக்கும் வணக்கத்துக்கும் பெருந் துணையாய் உள்ளவை. இந்த அறிகுறிகள் தெருவிலே கிடக்கிற கல்லிலும் மரத்திலும் இருக்கின்றனவா? இந்தத் திருவுருவங்களிலே கடவுளுடைய மந்திரரூபம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அன்றியும் இந்தத் திருவுருவங்களை வழிபடுதல் கடவுளால் விதிக்கப் பட்டிருக்கின்றது. ஆதலால் இந்தத் திருவுருவங்களை வழிபடுதல் கடவுளை வழிபடுதலாம்.

சிஷ்யன்: அறிவாலே கூடினவர்களும் கோயிலுக்குப் போக வேண்டுமா?

குரு: எவரும் கோயிலுக்குப் போக வேண்டுவதே. மாணிக்கவாசக சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள் அறிவாலே கூடினவர் அல்லரோ? அவர்கள் எப்போதாவது கோயிலுக்குப் போகாமல் இருந்தார்களா? எந்த ஞானிகளும் கோயிலை விலக்க மாட்டார்கள்.

சிஷ்யன்: சிலர் "மனந்தானே கோயில்; மனத்திலே கடவுளை கும்பிட்டால் போதாதா?" என்று சொல்கிறார்கள்; அது சரிதானா?

குரு: கடவுளை வணங்குவதிலே விருப்பமில்லாதவர்கள் மாத்திரம் இப்படிப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். சிவபத்தி உள்ளவர் ஒருவரும் இப்படிச் சொல்ல மாட்டார். மனசிலே கும்பிடுவது எப்படி?

சிஷ்யன்: கடவுளை ஒரு உருவம்போல் நினைத்துக் கும்பிடலாம்.

குரு: கோயில்களிலுள்ள திருவுருவங்களுக்கு இருக்கிற மகிமை ஒன்றும் அந்த உருவத்துக்கு இல்லையே. அன்றியும் மனத்திலே உருவம் உண்டாக்கிக் கும்பிடுவதிலும் பார்க்க, கண்ணாலே காணும் ரூபத்தைப் பார்த்துக் கும்பிடுவது இலகு. ஒரு பெரிய கணக்கை மனத்தாலே செய்வதிலும் பார்க்க, அதிலுள்ள எண்களை ஒன்றிலே எழுதிச் செய்வது எவ்வளவு இலகு.

ஆதலால், கோயிலிலுள்ள திருவுருவங்களை வணங்குவதே உத்தமம். போக இயலாத காலங்களிலே மந்திர வடிவமைக்கப்பட்ட அந்தத் திருவுருவங்களை நினைத்து நாங்கள் கும்பிடலாம். (யோகிகள் ஞானிகளுக்கு வேறு வழிகளும் உண்டு,)

சிஷ்யன்: வேறெதை நாம் வணங்கலாம்.

குரு: சிவனடியார்களையும், திருநீற்றையும், உருத்திராக்கத்தையும், பஞ்சாக்கரத்தையும் சிவபெருமான் என்று நாம் வணங்கலாம்.

சிஷ்யன்: சிவனடியார் என்பவர் யார்?

குரு: சிவனிடத்திலே மெய்யன்பு நிறைந்தவர்கள் சிவனடியார்களாம். மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சண்டேசுரர் முதலிய நாயன்மாரும், அகத்தியர், தசீசி முதலிய முனிவர்களும், பிரமா விஷ்ணு முதலிய தேவர்களும், மெய்கண்டதேவர் முதலிய ஞான நூலாசிரியர்களும் சிவனடியார்களுட் பிரசித்தி பெற்றவர்கள்.

"தாபர சங்க மங்கள் என்றிரண்டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன்
நீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
யாம்பரம் பொருளை நாளும் அர்ச்சிநீ அன்பு செய்தே."

–சித்தியார் சுப. 2. 28

. . . தொடரும்

டன்டாஸ் பல் மருத்துவமனை
போவிபாட் பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்
Dr. Vanathy Jeevakumar
டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்

சகல பல் மருத்துவ சேவைகள்
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction

Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905-281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont. ,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905-846-9929**

சிவபூமி முதியோர் இல்ல முன்றாவது ஆண்டு நிறைவு விழாவின்போது எடுக்கப்பட்டது.

12வது உலகசைவமாநாட்டு நிகழ்வில்